SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

சந்தேகத்திற்குரிய தீவிரவாதப் போக்குகளைப் பற்றி ஆரம்பத்திலேயே தகவலளிக்க ஊக்கமளித்தல்

அக்கறையுள்ள குடும்பத்தார், நண்பர்கள் அல்லது தனிநபர்களுக்குத் துணைபுரியும் தகவல் தொகுப்பு

முன்னுரை

SGSecure திட்ட அலுவலகம் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை

அன்புடையீர்,

சிங்கப்பூருக்கு எதிரான பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்ந்து அதிகமாகவே இருந்து வருகிறது. பயங்கரவாத அமைப்புகளாலும் அவற்றின் வன்முறை சித்தாந்தங்களாலும் மிரட்டல் நீடிக்கிறது. வெளிநாட்டு நடப்புகளாலும் நமது பாதுகாப்பு பாதிப்படையலாம். தீவிரவாதிகள் வெளிநாட்டுப் பூசல்களையும் மனவருத்தங்களையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தீவிரவாதக் கொள்கைகளைப் பரப்பி ஆதரவாளர்களைத் திரட்டக்கூடும். இணையத்தில் பரவும் தீவிரவாதச் சித்தாந்தங்களால், சிங்கப்பூரில் தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொள்வோரின் மிரட்டலும் அதிகரித்துள்ளது.

நம்மில் சிலர் தீவிரவாதச் சிந்தனையாளர்களை நேரில் சந்தித்திருப்போம் அல்லது அக்கறை உள்ளவர்களிடமிருந்து (எ.கா. தீவிரவாதச் சிந்தனையாளரின் அன்புக்குரியோர், நண்பர்கள்) அவர்களைப் பற்றி கேள்விப்பட்டிருப்போம். அக்கறை உள்ளவர்கள் உங்களிடம் நிலைமையை பகிர்ந்து அறிவுரை கேட்டிருக்கலாம். நீங்கள் விழிப்பாகவும் தயாராகவும் இருந்தால்தான், பயங்கரவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் எதிரான நமது தற்காப்பில் முக்கிய பங்காற்ற முடியும்.

இந்தத் தகவல் தொகுப்பில் உள்ள தகவல்களுடன் நீங்கள்:

- தீவிரவாதச் சிந்தனையின் அறிகுறிகளையும் அதுபற்றி தகவல் அளித்த பிறகு என்ன நடக்கும் என்பதையும் தெரிந்து வைத்திருக்கலாம்;
- தீவிரவாதச் சிந்தனையாளர் எனச் சந்தேகிக்கும் ஒருவரைப் பற்றி அக்கறையுள்ளவர் தகவல் அளிக்கத் தயங்கும்போது அவரிடம் எடுத்துச்சொல்லி உறுதியளித்து அவரது அக்கறைகளைப் போக்கலாம்; அதோடு
- தகவல் அளிப்பதற்கான வழிமுறைகளைத் தெரிந்துகொண்டு, அக்கறையுள்ள ஒருவருக்குத் தேவைப்படும்போது அறிவுரை வழங்கலாம்.

இந்தத் தகவல் தொகுப்பு உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம். சிங்கப்பூரைப் பாதுகாப்பாக வைத்திருக்க உங்களது சுற்றுவட்டத்தில் எப்போதும் விழிப்புடன் இருங்கள். நன்றி.

இந்தத் தகவல் தொகுப்பு பற்றி ஏதாவது கேள்விகள் இருந்தால் SGSECURE@mha.gov.sg இணையத்தளத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரிந்த யாரிடமாவது தீவிரவாதச் சிந்தனைகளின் அறிகுறிகள் தென்பட்டால், நீங்கள் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையுடன் (1800-2626-473) தொடர்புகொண்டு உதவி பெறலாம்.

உள்ளடக்கப் பக்கம்

தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக்கொள்வது என்பது என்ன? 4

தீவிரவாதச் சிந்தனையின் அறிகுறிகள் என்ன? 6

அக்கறையுள்ள ஒருவர் தீவிரவாதச் சிந்தனையாளரைப் பற்றி தகவல் தெரிவித்தபின் என்ன நடக்கும்? 7

மறுவாழ்வுக்கான அணுகுமுறை என்ன? 8

அக்கறையுள்ள ஒருவர் என்னை அணுகி அறிவுரை கேட்கும்போது நான் என்ன செய்யவேண்டும்? 9

நடைமுறை அனுபவம் உள்ளவர்களின் கருத்துகள் என்ன? 11

மறுவாழ்வளித்தல் தொடர்பான வெற்றிக் கதைகள் ஏதேனும் உள்ளனவா?........ 13

தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக்கொள்வது என்பது என்ன?

தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொள்வது என்பதன் விளக்கம்

ஒருவர் தீவிரவாதப் பரப்புரையில் ஈடுபாடு காட்டி, அதன் பின்னணியிலுள்ள சித்தாந்தத்தை நம்பத் தொடங்கும்போது **தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொள்வார்**. அதன்பின்னர், அந்தச் சித்தாந்தத்தின்படி செயல்படத் தொடங்குவார். இத்தகைய சித்தாந்தங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட அமைப்புகளுக்கு, மக்களுக்கு அல்லது பிரிவுகளுக்கு எதிராக **வன்முறை தாக்குதல்கள்** நடத்தத் தூண்டும். குடிமக்கள், ஒரு குறிப்பிட்ட இனத்தவர் அல்லது சமயத்தவர், அல்லது அரசாங்கம் போன்றவை குறி வைக்கப்படலாம்.

எளிதில் நம்பிவிடக்கூடிய பலவீனமானவர்களிடம் தீவிரவாதச் சிந்தனைகளைப் பரப்புவதற்கு **இணையத்தளங்களும் சமூக வலைத்தளங்களும்** பெரிதும் துணை புரிகின்றன.

- சிறுசிறு தகவல் துணுக்குகளும் உணர்வுகளைத் தூண்டும் உள்ளடக்கமும், தீவிரவாதச் சிந்தனைகளைக் கவர்ச்சிகரமாகக் காட்டுகின்றன.
- இதுபோன்ற உள்ளடக்கம் எளிதில் கிடைப்பதால் தீவிரவாதச் சிந்தனைகளைப் பல்வேறு பார்வையாளர்களிடம் பரவலாகப் பரப்ப முடிகிறது.
- இணையத்தளங்கள், தீவிரவாத உள்ளடக்கத்தை “லைக்” செய்ய, கருத்து தெரிவிக்க, அல்லது பகிர வாய்ப்பளித்து, பார்வையாளர்களை ஈடுபடுத்துகின்றன.

தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொள்ளும் சிங்கப்பூரர்களின் **எண்ணிக்கை அதிகரித்துள்ளது.**

2007 – **2014**

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் **11** பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2015 – **மார்ச் 2023**

இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2015 முதல் 2023 மார்ச் வரை **37**-ஆக அதிகரித்துள்ளது.

தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொள்வோரின் **வயதும் குறைந்து வருகிறது.**

2015 முதல், தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொண்ட 20 வயதும் அதற்குக் குறைவான வயதுமுள்ள மொத்தம் **11** சிங்கப்பூரர்களுக்கு எதிராக உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- *தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொண்ட முதல் நபருக்கு எதிராகச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆண்டு.*
- *ISIS தலையெடுத்த பிறகு.*

2007 – **2014**

தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஆக இளையவருக்கு 20 வயது.

2015 – **மார்ச் 2023**

தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஆக இளையவருக்கு வயது 15.

அண்மையில் சிங்கப்பூரில் தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக் கொண்டவர்களில் சிலர்

2020

டிசம்பர் 2020:
பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக 26 வயது பங்ளாதேஷி ஆடவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். பயங்கரவாத நிதியளிப்பு குற்றங்களுக்காக அவர் விசாரிக்கப்பட்டார்.

டிசம்பர் 2020:
2 பள்ளிவாசல்களில் முஸ்லிம்களைத் தாக்கத் திட்டமிட்ட 16 வயது சிங்கப்பூர் ஆடவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

2021

மார்ச் 2021:
இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனுக்கும் இடையிலான பூசலால் கோபமடைந்த 20 வயது இளைஞர், யூதத் திருக்கோயிலில் யூதர்களைக் கத்தியுடன் தாக்கத் திட்டமிட்டு ஆயுத்தமாகிக் கொண்டிருந்தபோது கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

2022

ஏப்ரல் 2022:
ஆயுதச் சண்டையில் ஈடுபடுவதற்காக வெளிநாட்டுக்குப் பயணம் செல்லத் திட்டமிட்ட 29 வயது சிங்கப்பூர் ஆடவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

டிசம்பர் 2022:
ISIS தீவிரவாத அமைப்பின் ஆதரவாளரான 18 வயது ஆடவர், சிங்கப்பூரில் மூன்று தாக்குதல்கள் நடத்தத் திட்டமிட்டிருந்ததால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இருட்டான பின்சந்துகளில் முஸ்லிம் அல்லாதவர்களைக் குத்திக் கொல்வது அவரது திட்டங்களில் ஒன்று.

டிசம்பர் 2022:
ISIS, அல்-காய்தா தீவிரவாத அமைப்புகளின் ஆதரவாளரான 15 வயது இளைஞர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அவர் சிங்கப்பூரில் தாக்குதல்கள் நடத்துவது குறித்து பரிசீலித்து வந்தார். சிங்கப்பூரில் சுற்றுப்பயணிகளைக் கவரும் இடங்களில் கத்தியுடன் தாக்குவது, தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை அவர் பரிசீலித்தார். பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளுக்காக உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆக இளையவர் இவர்.

2023

ஜனவரி 2023:
16 வயது இளைஞருக்குக் கட்டுப்பாட்டு ஆணை விதிக்கப்பட்டது. இவர் இணையத்தில் ISIS தீவிரவாத அமைப்பின் பரப்புரைகளைப் படித்து தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டார். இந்த அமைப்பின் கொள்கைகளைப் பரப்பும் மூன்று காணொளிகளைத் தயாரித்து சமூக ஊடகத்தில் வெளியிட்டார்.

தீவிரவாதச் சிந்தனையாளருக்கும் சமுதாயத்திற்கும் உதவி புரிய தக்க சமயத்தில் குறுக்கிடுவது முக்கியம்.

தீவிரவாதச் சிந்தனையின் அறிகுறிகள் என்ன?

தீவிரவாதச் சிந்தனையாளர்களின் **வயது, பாலினம், இனம், சமயம், சமூகப் பொருளாதார நிலை எதுவாக வேண்டுமானாலும்** இருக்கலாம். தீவிரவாதச் சிந்தனையின் அறிகுறிகள் ஒருவரிடம் தென்படும்போது, காலம் கடப்பதற்குள் தக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம். பெரும்பாலும் **குடும்பத்தார், நண்பர்கள், சக ஊழியர்கள் ஆகியோரே இந்த அறிகுறிகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.**

தீவிரவாதச் சிந்தனையாளர்கள் சில **கண்கூடான செயல்களையும் அறிகுறிகளையும் வெளிக்காட்டுவார்கள்.** எடுத்துக்காட்டாக:

தீவிரவாத / பயங்கரவாத அமைப்புகளை ஆதரிக்கும் முத்திரைகளை அல்லது சின்னங்களைக் காட்சிப்படுத்துவது

எ.கா. ISIS கொடியைத் தனது சமூக வலைத்தளத்தில் அடையாளப் படமாகப் பயன்படுத்துவது

தீவிரவாத இணையத்தளங்களை அடிக்கடி பார்ப்பது

எ.கா. பயங்கரவாதப் பரப்புரைகள் கொண்ட இணையத்தளங்களையும் வெளிநாட்டுத் தீவிரவாத சமய போதகர்களின் காணொளிகளையும் அடிக்கடி பார்ப்பது

சமூக வலைத்தளங்களில் தீவிரவாதக் கருத்துகளைப் பதிவிடுவது / பகிர்வது. எடுத்துக்காட்டாக, பயங்கரவாதிகளை / பயங்கரவாத அமைப்புகளை மட்டுமன்றி வன்முறையையும் ஆதரிப்பதாக / பாராட்டுவதாகச் சொல்வது

எ.கா. 2019 மார்ச் மாதம் நடந்த கிரைஸ்ட்சர்ச் தாக்குதலைத் தாம் ஆதரிப்பதாகச் சொல்வது, தாக்குதலை நடத்தியவரை "மாவீரன்" என்று வர்ணிப்பது

நண்பர்களிடமும் உறவினர்களிடமும் தீவிரவாதக் கருத்துகளைப் பகிர்வது

எ.கா. ஒருவரது மதத்தின் எதிரிகளைக் கொல்வது சட்டபூர்வமானது என்று சொல்வது

பிற இனங்களை அல்லது சமயங்களைச் சேர்ந்தவர்கள்மீது விரோதத்தை அல்லது வெறுப்பைத் தூண்டும் விதத்தில் பேசுவது

வெளிநாட்டில் அல்லது சிங்கப்பூரில் வன்முறைச் செயல்களில் பங்கேற்க நினைப்பதாகச் சொல்வது

எ.கா. வெளிநாட்டுச் சண்டைகளில் போரிட அல்லது சிங்கப்பூரில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்த விரும்புவதாகச் சொல்வது

வன்முறைச் செயல்களில் பங்கேற்குமாறு மற்றவர்களைத் தூண்டுவது

பயங்கரவாதம் தொடர்பான சம்பவங்கள் பற்றி ஊடகங்களில் வெளிவரும் செய்திகளைப் படித்து தெரிந்துகொள்வது பயனுள்ளதாக இருக்கும். பயங்கரவாதம், தீவிரவாதச் சிந்தனைகள் பற்றிய புரிந்துணர்வைப் பெறுவதற்கும், சந்தேகத்திற்குரிய அறிகுறிகளைக் கண்டுகொள்வதற்கும் அந்தச் செய்திகள் உதவக்கூடும்.

அக்கறையுள்ள ஒருவர் தீவிரவாதச் சிந்தனையாளரைப் பற்றி தகவல் தெரிவித்தபின் என்ன நடக்கும்?

தகவல் தெரிவித்தவுடன், அது **உண்மைதானா என்பதை உறுதிப்படுத்த** உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை **சோதனைகளை மேற்கொள்ளும்**. சாத்தியப்பட்டால், தகவல் அளித்தவரிடமும் பேசும். **தகவல் அளித்தவரின் அடையாளம் பாதுகாக்கப்படும்.**

சந்தேகிக்கப்பட்டவர் **தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளவில்லை** எனப் புலன் விசாரணையில் தெரியவந்தால், **மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது.**

சந்தேகிக்கப்பட்டவர் **தீவிரவாதச் சிந்தனைகளின் ஆரம்பக் கட்டத்தில்** இருந்தால், **ஆலோசனைக்கு** அனுப்பப்படலாம். அவருக்கு எதிராக உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லாமல் போகலாம்.

சந்தேகிக்கப்பட்டவரால் **பாதுகாப்புக்கு மிரட்டல்** எழலாம் எனக் கருதப்பட்டால், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுத்து, அவருக்கு **மறுவாழ்வு** அளிக்கப்படும். தடுப்புக்காவலில் இருப்போருக்கும் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் கண்காணிக்கப்படுவோருக்கும் மறுவாழ்வளிக்க **விரிவான, முழுமையான அணுகுமுறையை** உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை கையாளும். **சமயம், மனோவியல், சமூகம்** ஆகிய அம்சங்களில் மறுவாழ்வு முயற்சி மேற்கொள்ளப்படும்.

தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளும் ஒருவரைப் பற்றி ஆரம்பத்திலேயே புகார் செய்யும்போது,

அவருக்கு முழுமையான, தீவிரமான, நீண்டகால மறுவாழ்வு கிடைக்கும். ஒவ்வொரு மறுவாழ்வுத் திட்டமும் தடுப்புக்காவலில் இருப்பவரின் அல்லது கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் கண்காணிக்கப்படுபவரின் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தயாரிக்கப்படும். ஒவ்வொருவரது **மறுவாழ்வுத் திட்டமும் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பை அதிகப்படுத்த**, அதில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரும் முழுமுனைப்புடன் ஒத்துழைப்பார்கள்.

மறுவாழ்வுக்கான அணுகுமுறை என்ன?

சமயம்

- தடுப்புக்காவலிலும் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் கண்காணிப்பிலும் இருக்கும் அனைவரும், மாதத்தில் குறைந்தது ஒருமுறையாவது சமய ஆலோசனை அங்கத்தில் கலந்துகொள்ள வேண்டும். அவர்கள் வளர்த்துக் கொண்ட தீவிரவாதச் சிந்தனையைக் களைவதற்காக இந்த அங்கத்தில் முறையான சமய போதனைகளும் அர்த்தங்களும் அளிக்கப்படும்.
- தடுப்புக்காவலில் இருப்பவர்களுக்கு சமயக் கல்விமான்கள், ஆசிரியர்கள் ஆகியோரது காணொளி விரிவுரைகள், புத்தகங்கள் போன்றவை கிடைக்கும்.

மனோவியல்

- தடுப்புக்காவலில் இருக்கும்போதும், கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் விடுவிக்கப்பட்ட பிறகும், மனோவியலாளர்கள் அவர்களுக்குக் கவனிப்பளிப்பார்கள். அவர்கள் வெறுப்பையும் வன்முறை எண்ணங்களையும் வளர்த்துக் கொள்ளக்கூடிய சாத்தியம், தீவிரவாதச் சிந்தனைகளுக்கு உள்ளாகக்கூடிய பலவீனம் போன்ற கருத்தியல் அல்லாத பிரச்சனைகளைச் சரிசெய்ய மனோவியலாளர்கள் முயற்சி செய்வார்கள்.
- அவர்களது நடத்தைகளையும் புலனுணர்வுகளையும் மனோவியலாளர்கள் அடிக்கடி மதிப்பிடுவார்கள். அதோடு, அவர்களது தீவிரவாத நம்பிக்கைகளின் பின்னணியில் உள்ள தவறான கண்ணோட்டங்களை மாற்றியமைக்கவும் உதவி செய்வார்கள்.

சமூகம்

- தடுப்புக்காவலில் இருப்பவர்கள் கூடுமானவரை குடும்பத்துடன் தொடர்பைக் கட்டிக்காக்க, வாரந்தோறும் குடும்பத்தினரைச் சந்திக்க அனுமதி அளிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமூக ஆதரவும் தேவையான மற்ற வகை ஆதரவுகளும் வழங்க பின்கவனிப்பு அதிகாரி நியமிக்கப்படுகிறார்.



- தடுப்புக்காவலில் இருப்பவர்களுடன் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அடிக்கடி உரையாடி கூடுதல் ஆதரவளிப்பார்கள். அவர்கள் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் இருக்கும்போது அதிகாரிகள் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து, சமுதாயத்துடன் மீண்டும் ஒன்றிணைய உதவி புரிவார்கள். இதன்வழி, அவர்கள் மீண்டும் தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளக்கூடிய அபாயம் குறைக்கப்படுகிறது.
- அனைத்து-அமைப்பு பின்நலச்சேவை குழுமம் தனது சமூகநல அமைப்புகளின் கட்டமைப்பு மூலமாக உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உணர்வுப்பூர்வ, சமூக மற்றும் நிதி ஆதரவு வழங்குகிறது.

அக்கறையுள்ள ஒருவர் என்னை அணுகி அறிவுரை கேட்கும்போது நான் என்ன செய்யவேண்டும்?

உங்களை **அணுகுபவர்மீது** பரிவு காட்டுவதன்வழி நீங்கள் **உதவி செய்யலாம்.** CARE

C

[Create] உங்களை அணுகுபவர் தனது அக்கறைகளை / கவலைகளை / சந்தேகங்களை உங்களுடன் பகிர பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுங்கள்.

பொருத்தமான இடத்தில் **உரையாடுங்கள்**.

- உங்களை அணுகுபவரை நேருக்குநேர் சந்திக்கும்போது புரிதலும் நம்பிக்கையும் வளரும்.

உங்களுடன் பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என **உறுதி அளித்திடுங்கள்**.

- ஆனால், உங்களுடன் பகிரப்பட்ட தகவல்கள் உடைமைக்கும் உயிருக்கும் உடனடியான அச்சுறுத்தல் இருப்பதாகக் காட்டினால் நீங்கள் உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும்.

உங்களை அணுகுபவரின் உணர்வுகளை, எடுத்துக்காட்டாக குற்ற உணர்வு, அவமானம், பயம், குழப்பம், பகிர முன்வருவதில் எதிர்நோக்கிய சிரமம் போன்றவற்றைப் **புரிந்து கொள்ளுங்கள்.** அவரின் நிலைமையை உணர்ந்து ஆறுதல் காட்டுங்கள். அவரை மதிப்பிடாதீர்கள்.

உங்களை அணுகுபவர் தனது சந்தேகங்களைத் தனக்குள் மறைத்து வைக்காமல் சரியான காரியத்தைச் செய்திருப்பதாக **எடுத்துச்சொல்லி** தைரியம் கொடுங்கள்.

A

[Ask] உங்களை அணுகுபவரிடம் அவரது சந்தேகங்கள் பற்றி கூடுதல் விவரம் கேளுங்கள். அவை தீவிரவாதச் சிந்தனைகளின் அறிகுறிகளை ஒத்துள்ளதா என்பதைக் கணித்திடுங்கள் *(தீவிரவாதச் சிந்தனையின் அறிகுறிகளுக்குப் பக்கம் 6 பாருங்கள்).*

R

[Reassure] பொறுப்பமைப்புகள் விரைவாகச் செயல்பட்டு எந்தவொரு விபரீதமும் நிகழாமல் தடுப்பதற்கு ஆரம்பத்திலேயே தகவல் தெரிவிப்பது அவசியம் என உங்களை அணுகியவரிடம் எடுத்துச் சொல்லுங்கள். தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டவரும் விபரீதத்திற்கு உள்ளாகலாம் என்பதைப் புரிய வையுங்கள். தீவிரவாதச் சிந்தனைகளுக்கு உள்ளாகக்கூடிய அபாயத்தில் இருப்பவர்கள் தங்களை மற்றும்/அல்லது பிறரை காயப்படுத்துவதற்குமுன் உதவியும், வழிகாட்டுதலும், ஆலோசனையும் பெற இயலும்

(தகவல் தெரிவித்தபின் நடப்பவற்றை அறிய பக்கம் 7 பாருங்கள்).

தீவிரவாதச் சிந்தனையாளரை ஒரு குற்றவாளியாக / பயங்கரவாதியாகச் **சித்தரிக்க வேண்டாம்**. அதற்குப் பதிலாக, தவறாக வழிகாட்டப்பட்ட ஒருவராகவும், உதவி தேவைப்படுபவராகவும் காட்டுங்கள்.

தீவிரவாதச் சிந்தனையாளரின் நடத்தைக்கு உங்களை அணுகியவரே பொறுப்பு என்றோ அல்லது முன்கூட்டியே தகவல் தெரிவித்திருக்க வேண்டும் என்றோ நினைக்கச்செய்யும் எந்தவொரு கருத்தையும் / வார்த்தைகளையும் **சொல்ல வேண்டாம்** (அதாவது, குற்ற உணர்வைத் தூண்ட வேண்டாம்).

உங்களை அணுகியவர் தகவல் தெரிவிப்பதே தீவிரவாதச் சிந்தனையாளர் மற்றும் சமூகத்தின் நலனுக்கும் பாதுகாப்புக்கும் நல்லது என்பதால் அவர் செய்வது சரியானதே எனச் **சுட்டிக்காட்டுங்கள்**. ஒரு நண்பரை / குடும்பத்தாரை சிறை வாழ்க்கைக்கு அவர் அனுப்பவில்லை என்றும் எடுத்துச் சொல்லுங்கள்.

தீவிரவாதச் சிந்தனையாளர் பற்றி தகவல் தெரிவித்தபோது, விபரீதம் நிகழாமல் தடுக்கப்பட்டு, தீவிரவாதச் சிந்தனையாளருக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளைக் **குறிப்பிடுங்கள்**

(சில எடுத்துக்காட்டுகளுக்கு பக்கம் 13 பாருங்கள்)

E

[Encourage] உங்களை அணுகுபவரைச் சந்தித்து பேசிய பிறகு, உடனடியாக உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் பயங்கரவாத எதிர்ப்புத் தொலைபேசி சேவையை 1800-2626-473 என்ற எண்ணில் தொடர்புகொள்ளுமாறு, காவல்துறையை (1800-255-0000) அழைக்குமாறு அல்லது SGSecure செயலி வாயிலாகத் தகவல் தெரிவிக்குமாறு அல்லது சமய மறுவாழ்வுக் குழுவின் உதவித் தொலைபேசி சேவையை (1800-774-774-7) அழைக்குமாறு ஊக்கம் கொடுங்கள்

(தகவல் தெரிவித்தபின் நடப்பவற்றை அறிய பக்கம் 7 பாருங்கள்).

தகவல் தெரிவிப்பரின் அடையாளம் பாதுகாக்கப்படும்.

தீவிரவாதச் சிந்தனையின் அறிகுறிகள் தென்பட்டால், அவரது உதவி தேவைப்படும் அவசரநிலையாக அதனைக் கருதுமாறு நினைவுபடுத்துங்கள்.

தீவிரவாதச் சிந்தனையாளருக்குச் சொந்தமாக ஆலோசனை வழங்க முயற்சி செய்ய வேண்டாமென்று உங்களை அணுகுபவருக்கு நினைவுபடுத்துங்கள்.

அவசியம் எனக் கருதினால்

- அக்கறையுள்ள நபருக்கு கிடைக்கக்கூடிய பொருத்தமான சமூகம்-சார்ந்த வளங்களின் விவரங்களை வழங்குங்கள். எடுத்துக்காட்டாக, சமய மறுவாழ்வுக் குழு அல்லது உணர்வுபூர்வ அல்லது மனோவியல் ஆதரவு தேவைப்படும் பொதுமக்கள் அழைக்கக்கூடிய பொதுவான உதவித் தொலைபேசி சேவைகள் (https://www.gov.sg/article/call-these-helplines-if-you-need-emotional-or-psychological-support).
- தமது நண்பர் / குடும்பத்தார் பற்றி தகவல் தெரிவித்தபின் ஒருவர் வேதனையும் கலக்கமும் அடையலாம். எனவே, நீங்கள் மீண்டும் அவரை தொடர்புகொண்டு நலன் விசாரிக்கலாம்.

நடைமுறை அனுபவம் உள்ளவர்களின் கருத்துகள் என்ன?

உஸ்தாஸ் டாக்டர் முகமது பின் அலி, இணைத் தலைவர், சமய மறுவாழ்வுக் குழு

அக்கறையுள்ள தனிநபர்களுக்கு:

ஒரு பிள்ளை மேற்கொண்டு தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளாமல் தடுப்பதில் குடும்பத்தாருக்கு முக்கிய பங்கிருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. எனவே, தகவல் தெரிவிப்பது ஊக்குவிக்கப்படுகிறது; தங்களது அன்புக்குரியவரின் நலனுக்காகவே எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்ட ஒருவருக்கு மறுவாழ்வளித்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்வோருக்கு மறுவாழ்வளிப்பது தற்போது நிலவும் தீவிரவாத அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கான முக்கியமான, பயன்மிக்க உத்தியாகும்.

சமய மறுவாழ்வுக் குழுவின் ஆலோசனை முறையில் மூன்று முக்கியப் படிநிலைகள் உள்ளன. முதலாவதாக, தீவிரவாதச் சிந்தனைகளும் சமயப் போதனைகள் குறித்த தவறான எண்ணங்களும் களையப்படும். இரண்டாவதாக, இந்த எதிர்மறையான சித்தாந்தங்களுக்குப் பதிலாகச் சரியானவை போதிக்கப்படும். இறுதியாக, இங்குள்ள பல்வேறு சமூகங்களுடன் ஒற்றுமையாக வாழ்வதற்குச் சமய மிதவாதம், அமைதி, நல்லிணக்கம் ஆகியப் பண்புகள் அறிவுறுத்தப்படும்.

தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டதாகச் சந்தேகிப்போர் பற்றி பொறுப்பமைப்புகளிடம் தெரியப்படுத்தத் தயங்கும் அக்கறையுள்ளவர்களுக்கு என்ன அறிவுரை கூறுவீர்கள்?

குடும்பங்களில் சமயத்தைப் பற்றிய சரியான புரிந்துணர்வை வளர்ப்பதன்மூலம், தங்களது பிள்ளைகளின் நடத்தையிலும் சமயப் புரிந்துணர்விலும் ஏற்படக்கூடிய ஒழுங்கீனங்களைக் குடும்பத்தாரால் கண்டுபிடிக்கவும் சரிசெய்யவும் முடியும். தீவிரவாதிகள் தங்களது உண்மையான நோக்கங்களைச் சமயம் என்ற திரைக்குப் பின்னால் மறைத்து வைப்பது வழக்கம். எனவே, சமயத்தைக் கடைபிடிப்போர் உண்மையைக் கண்டறியக்கூடிய அளவுக்குத் துடிப்பாகவும் திறமையாகவும் இருக்கவேண்டும். தீவிரவாதிகளின் வன்முறைச் சித்தாந்தங்களை நம்பி ஏமாறக்கூடாது.

குடும்பத்திலுள்ள ஒருவர் தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்வதாகச் சந்தேகம் எழுந்தால், ஆரம்பத்திலேயே அதுபற்றி பொறுப்பமைப்புகளிடம் தெரியப்படுத்தும்போது பெற்றோரும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் தங்களது பிள்ளைக்கு உதவி செய்கிறார்கள். ஒரு பிள்ளை மேற்கொண்டு தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளாமல் தடுப்பதில் குடும்பத்தாருக்கு முக்கிய பங்கிருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. எனவே, தகவல் தெரிவிப்பது ஊக்குவிக்கப்படுகிறது; தங்களது அன்புக்குரியவரின் நலனுக்காகவே எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

சமுதாயத்தின் நிலைத்தன்மைக்குக் குடும்பம் எப்போதுமே முக்கியமாக இருந்துள்ளது. குடும்பத்தினர் மீள்திறனுடன் இருப்பதை உறுதி செய்யும்போது, தீவிரவாதத்தையும் சமூகத்தில் அதன் தாக்கத்தையும் எதிர்க்கவும் குறைக்கவும் பெரும் துணைபுரியும். வழக்கத்திற்கு மாறாக நடந்துகொள்ளும் குடும்பத்தினருக்கு நாம் செய்யும் உதவி, தீவிரவாத வன்முறைகளின் அச்சுறுத்தலைக் குறைக்க பெரிதும் உதவும்.

அக்கறையுள்ள ஒருவர் அறிவுரை கேட்டு அணுகும் இந்த வழிகாட்டியின் வாசகருக்கு என்ன அறிவுரை சொல்வீர்கள்?

குடும்பமே முதல்நிலை தற்காப்பு என்பதைப் புரிந்துகொண்டு, பெற்றோர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்குத் துணைபுரிய அனைத்து முயற்சியும் எடுக்கப்பட வேண்டும். தொடக்கமாக, தீவிரவாதச் சிந்தனைகளின் அறிகுறிகளை அடையாளம் காண எல்லாக் குடும்பங்களுக்கும் கற்றுத்தரப்பட வேண்டும். குடும்பத்தினரே ஆக நெருக்கமானவர்கள் என்பதால், அவர்களே அறிகுறிகளைப் பெரும்பாலும் அடையாளம் காணமுடியும்.

உஸ்தாஸ் அகமது சைஃபுல் ரிஜால் பின் ஹசான், ஆலோசகர், சமய மறுவாழ்வுக் குழு

தீவிரவாதச் சிந்தனையாளர் என சந்தேகிக்கப்படுபவருக்காக ஒருவர் உங்களிடம் அறிவுரை கேட்டால்:

அவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அவர்களின் கண்ணோட்டங்களைப் புரிந்துகொள்ள முயற்சியெடுத்து, உரையாடுவதற்குப் பாதுகாப்பான இடமளித்து, தேவையான வளங்களை வழங்குவது முக்கியம்.

தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்ட ஒருவருக்கு மறுவாழ்வளித்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஆலோசனை மூலம் மறுவாழ்வளிப்பதற்கு நிறைய பொறுமையும் காவலில் இருப்பவரின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண தகுந்த அறிவாற்றலும் தேவை. நாங்கள் முதலில் அவர்களைப் பற்றி தெரிந்துகொள்ளத் தொடங்குவோம். எதனால் அவர்கள் தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்வோம். அதன்பின்னர், ஜிஹாத், கலீபகம் போன்ற சித்தாந்தங்கள் பற்றி கலந்து பேசுவோம்.

தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்டதாகச் சந்தேகிப்போர் பற்றி பொறுப்பமைப்புகளிடம் தெரியப்படுத்தத் தயங்கும் அக்கறையுள்ளவர்களுக்கு என்ன அறிவுரை கூறுவீர்கள்?

ஒருவர் தீவிரவாதச் சித்தாந்தங்களில் ஆழ்ந்துவிடாமல் தடுப்பதற்கு, கூடிய விரைவில் தகவல் தெரிவிப்பது முக்கியம். குடும்பத்தினருக்கு அல்லது நண்பர்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், சமய மறுவாழ்வுக் குழுவிடம் ஆலோசனை நாடலாம்.

அக்கறையுள்ள ஒருவர் அறிவுரை கேட்டு அணுகும் இந்த வழிகாட்டியின் வாசகருக்கு என்ன அறிவுரை சொல்வீர்கள்?

தீவிரவாதச் சிந்தனைகள் எவருக்கும் தோன்றலாம். அவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அவர்களது கண்ணோட்டங்களைப் புரிந்துகொள்ள முயற்சித்து, உரையாடுவதற்குப் பாதுகாப்பான இடமளித்து, தேவையான வளங்களை வழங்குவது முக்கியம்.

மறுவாழ்வளித்தல் தொடர்பான வெற்றிக் கதைகள் ஏதேனும் உள்ளனவா?

தங்கள் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டு வெற்றிகரமாக மறுவாழ்வு அடைந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தகவல் தொகுப்பில் இரு எடுத்துக்காட்டுகள் இடம்பெற்றுள்ளன. மேலும் தெரிந்துகொள்ள https://www.mha.gov.sg/isd/stay-in-the-know இணையத்தளத்தை நாடலாம்.

ஜனவரி 2020

உயர்நிலைப் பள்ளி மாணவரான 17 வயது "டேனியல்" (உண்மைப் பெயரல்ல), 2020 ஜனவரி மாதம் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

- இணையம்வழி கிடைத்த வெளிநாட்டுத் தொடர்பின் மூலம் தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக்கொண்ட "டேனியல்", ISIS தீவிரவாத அமைப்பின் ஆதரவாளரானார்.
- ISIS தீவிரவாத அமைப்பின் வன்முறை நோக்கத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்த அவர், அமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும், இணையம்வழி அமைப்பின் கொள்கைகளைப் பரப்பும் முயற்சிகளுக்கும் துணைபுரிய விரும்பினார்.

"டேனியலின்" தீவிரவாதச் சிந்தனைகளைச் சரிசெய்து மறுவாழ்வு அளிக்க, சமய மறுவாழ்வுக் குழு, அனைத்து அமைப்பு பின்கவனிப்புக் குழு ஆகியவற்றுடன் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அணுக்கமாகச் செயல்பட்டது.

சமய மறுவாழ்வுக் குழுவின் சமய ஆலோசகருடனான மாதாந்தரச் சந்திப்புகளின் உதவியுடன் "டேனியல்" தனது சமய அறிவாற்றலை மேம்படுத்திக் கொண்டார்.

தீவிரவாதச் சிந்தனைகளுக்கு உள்ளாகக்கூடிய பலவீனத்தைக் குறைக்க மனோவியலாளர் "டேனியலுக்குத்" துணை புரிந்தார்.

"டேனியலின்" வழிகாட்டியான சமய மறுவாழ்வுக் குழு ஆலோசகர், "டேனியல்" தனிப்பட்ட இலக்குகளை வகுப்பதற்கு வழிகாட்டுதல் அளித்து, மறுவாழ்வுபெற ஊக்கம் கொடுத்தார்.

அவர் தடுப்புக்காவலில் இருக்கும்போது கல்வியைத் தொடரவும் தேசியத் தேர்வுகளை எழுதவும் ஏற்பாடுகள் செய்து தரப்பட்டன. கல்வி அமைச்சின் பயிற்சிபெற்ற ஆசிரியர்களான சமய மறுவாழ்வுக் குழு தொண்டூழியர்கள் முழுமுனைப்புடன் துணைப்பாட வகுப்புகள் நடத்தி ஆதரவளித்தனர். இதன்வழி, அவர் கல்வியில் பெரும் முன்னேற்றம் அடைந்தார்.

2020 2020ஆம் ஆண்டின் பொதுக் கல்விச் சான்றிதழ் வழக்கநிலை (தொழில்நுட்பப்பிரிவு) தேர்வில் ஐந்து பாடங்களில் நான்கில் சிறப்புத்தேர்ச்சி பெற்றார்.

2021 2021ஆம் ஆண்டு பொதுக் கல்விச் சான்றிதழ் வழக்கநிலை (கல்விப்பிரிவு) தேர்வில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றார்.

இந்த முயற்சிகள் "டேனியலுக்குப்" பலனளித்தன. அவரது மறுவாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தெரிந்தது. அவர் தடுப்புக்காவலில் இருந்தபோது அடிக்கடி வருகையளித்து, மறுவாழ்வுக்கு முழு ஆதரவளித்த குடும்பத்தாருக்கும் அவருக்கும் இடையில் நெருக்கமும் கூடியது.

ஜனவரி 2022

"டேனியல்" மறுவாழ்வில் நல்ல முன்னேற்றம் அடைந்ததால், 2022 ஜனவரி மாதம் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் விடுவிக்கப்பட்டார். அதன்பின் அவர் உயர்நிலைக்குப் பிந்திய கல்விக்கழகத்தில் தனக்குப் பிடித்த பாடத்துறையில் சேர்ந்து படிப்பைத் தொடர்கிறார்.

மார்ச் 2021

தீவிரவாதச் சிந்தனைகளைத் தாமாக வளர்த்துக்கொண்ட 20 வயது சிங்கப்பூரர் அமிருல், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 2021 மார்ச் மாதம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

- அமிருலுக்கு ஆலோசனை வழங்க சமய மறுவாழ்வுக் குழுவுடன் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அணுக்கமாகச் செயல்பட்டு வருகிறது.

சமய மறுவாழ்வுக் குழு ஆலோசகர் ஒருவர் மாதம் ஒருமுறை அமிருலைச் சந்தித்தார். அமிருல் தனது சமயத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும், இஸ்லாமியக் கோட்பாடுகளை சமூகக் கண்ணோட்டத்துடன் புரிந்துகொள்ளவும் ஆலோசகர் உதவி செய்தார். ஆயுதம் ஏந்தி வன்முறையில் ஈடுபடுவதே “ஜிஹாத்” என்ற தீவிரவாத நம்பிக்கையை அமிருல் கைவிட்டார்.

தனது பெற்றோரைப் பராமரித்து, தன்னை மேம்படுத்திக்கொண்டு சமூகத்திற்குப் பங்களிப்பதே “ஜிஹாத்” என்பதை இப்போது அவர் உணர்கிறார். சிங்கப்பூரில் பிற இனங்களையும் சமயங்களையும் சேர்ந்த மக்களுடன் ஒற்றுமையாக வாழ்வதன் முக்கியத்துவமும் அவருக்குப் புரிகிறது. சமயம் பற்றி தனக்குள்ள சந்தேகங்களை உள்ளூரில் சான்றுபெற்ற சமய ஆசிரியர்களிடமும் கல்விமான்களிடமும் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வது அவசியம் என்பதும் இப்போது அவருக்குத் தெரிகிறது.

- உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் மனோவியலாளரும் அமிருலை அடிக்கடி சந்தித்தனர். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனுக்கும் இடையிலான சண்டை போன்றவற்றில் சிக்கித் தவிக்கும் மக்களின் நிலையைக் கண்டு நாம் பரிதாபப்பட்டாலும், அதற்குத் தீர்வுகாண வன்முறையில் ஈடுபடவோ அல்லது வன்முறையைத் தூண்டவோ கூடாது என்பதை அமிருல் புரிந்துகொண்டார்.

அவர் தனது சிந்திக்கும் ஆற்றலையும், உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் திறன்களையும் வளர்த்துக்கொள்ளவும் மனோவியல் ஆலோசனை உதவியது. தீவிரவாதச் சிந்தனைகளுக்கு அவர் ஆட்படக்கூடிய சாத்தியத்தை இது குறைக்கும்.

- அமிருல் தடுப்புக்காவலில் இருந்தபோது, அறிவூட்டும், சுய மேம்பாட்டுக் கட்டுரைகள், காணொளிகள் போன்றவற்றைப் படிக்கவும் பார்க்கவும் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அவர் தெளிவானதோர் அடையாளத்தை வளர்த்துக் கொண்டு, நடைமுறை வாழ்க்கைக்குத் தேவைப்படும் திறன்களையும் கற்றுக் கொண்டார். எடுத்துக்காட்டாக, தனக்கான இலக்குகளை அவர் வகுத்தார். அமிருல் கல்வியைத் தொடர்வதற்கு உதவியாக, சமய மறுவாழ்வுக் குழுவின் தொண்டூழியர் ஒருவர் வாரந்தோறும் ஆங்கில வகுப்பு நடத்தினார்.

- அமிருலின் மறுவாழ்வுத் திட்டம் நல்ல பலனைப் பெற்றுத் தந்தது. சமய மறுவாழ்வுக் குழுவும் அவரது குடும்பத்தாரும் வழங்கிய பேராதரவு இதற்குத் துணை புரிந்தது.

மார்ச் 2023

அமிருலின் மறுவாழ்வில் நல்ல முன்னேற்றம் தெரிந்ததால், 2023 மார்ச் மாதம் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்தத் தகவல் தொகுப்பு உங்களுக்கு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம். ஒருவர் தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதாக உங்களுக்குச் சந்தேகம் எழும்போது, அதில் குறுக்கிடுவதா இல்லையா என்ற குழப்பம் ஏற்பட்டால், **ஆரம்பத்திலேயே தகவல் தெரிவிப்பதன்வழி அவர் உதவியும், வழிகாட்டலும், ஆலோசனையும் பெற நீங்கள் உதவி செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் உடனடியாகச் செயல்படும்போது, தீவிரவாதச் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டவர் உட்பட, பலரின் உயிரையும் காப்பாற்ற உதவி செய்வீர்கள்.**

சிங்கப்பூரைப் பாதுகாப்பாக வைத்திருக்க உங்கள் பங்கை ஆற்றுவதற்கு நன்றி.